# பெரியார் கலைக் கல்லூரி-கடலூர்-1

## தமிழ்த்துறை

## இளங்கலைத்தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு

## மூன்றாம் பருவம்

## திறன் அடிப்படையிலான விருப்பப்பாடம்-1

# பயன்பாட்டுத் தமிழ் BSTA34


முனைவர் கி. கவிதா

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

# திறன் அடிப்படையிலான விருப்பப்பாடம் - 1

## தாள் 1

## பயன்பாட்டுத் தமிழ்

**பாடநூல் :** கா. பட்டாபிராமன் - மொழிப் பயன்பாடு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இன்டஸ்டரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்.

| | | |
|---|---|---|
| அலகு 1 | : | ஆசிரியர் கடிதம் |
| அலகு 2 | : | அலுவலகம் கடிதம் |
| அலகு 3 | : | விளம்பரத் தமிழ், பதிப்பாசிரியர் |
| அலகு 4 | : | மெய்ப்புத் திருத்தலும் நூலாக்கப் பணியும் |
| அலகு 5 | : | வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபெறல், ஆவணங்கள் வரைதல். |

# பயன்பாட்டுத் தமிழ்

## அலகு - 1
## ஆசிரியர் கடிதங்கள்

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக உலகம் பெற்றுள்ள முன்னேற்றங்களில் ஒன்று, இதழியல் துறை. மக்களாட்சி முறையில் சட்டம் ,சட்டமன்றம் ,நீதிமன்றம், இதழியல் என்ற நான்கும் நான்கு தூண்களாக வலுபடுகின்றன. மக்களாட்சி முறையைத் தாங்கும் நான்காவது தூணாக "இதழியல்" மதிக்கப்படுகின்றது.

### *தலையங்கம்:*

தலையங்கம் உள்ள பக்கமே இதழின் "இதயப் பகுதி". சிறப்புக் கட்டுரையும் அந்தப் பக்கத்திலேயே இடம்பெறும். அடுத்த சிறப்பிடம் கடிதங்களுக்கு ஒதுக்குகின்றனர்.

### ஆசிரியர் கடிதம்:

ஆசிரியர் கடிதங்கள் சுவையானவை. அவை, "மக்களாட்சியின் நாடித் துடிப்புகள்". இவை மக்களின் உள்ளப் பாங்கினை உள்ளபடியே தெரிவிக்கின்றன. நாம் அனைவருமே நாடாளுமன்ற உறுப்பினராகவோ, சட்டமன்ற உறுப்பினராகவோ, நகராட்சி உறுப்பினராகவோ முடியாது. ஆயினும் இவர்களைப் போல் பொது நன்மைக்கான கருத்துக்களைக் கூற முழு உரிமை உண்டு. இவ்வுரிமையின் வெளிப்பாடே ஆசிரியர் கடிதங்கள் ஆகும் .

## கடிதப் பொருள்:

ஆசிரியர் கடிதங்களின் பொருள், இதழின் தலையங்கம், கேலிச்சித்திரம் பற்றிய கடிதங்கள். இதழ் வெளியிட்ட ஒரு சிறப்பு கட்டுரை பற்றிய கருத்து தெரிவிக்கும் கடிதம், நாட்டு நடப்பு பற்றி கருத்து தெரிவிக்கும் கடிதங்களும் இக்கடிதப்பொருளில் அமைகின்றன.

## கடிதம் எழுதுபவர்கள்:

நாளிதழ்களில் வெளியாகின்ற ஆசிரியர் கடிதங்களைப் பார்த்தோமானால், சமுதாய அணிவகுப்பைக் கண்ட மகிழ்ச்சி ஏற்படும். நாட்டு நடப்புப் பற்றியும், சிறப்புக் கட்டுரைகள் பற்றியும் தலையங்கம் பற்றியும் அரிய கருத்துக்களை, பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் - புகழ்பெற்ற அரசியல் மேதைகள் - கல்வி வல்லுனர்கள் - சட்ட மேதைகள் - பொதுநல அமைப்பின் நிர்வாகிகள் - தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற சான்றோர் கருத்துக்கள் கொண்ட சிறந்ததோர் அணிவகுப்பை காணலாம்.

## சிறப்புப் பகுதிக்குக் கடிதம் வரைவோர்:

இதழ்கள் வெளியிடும் சிறப்பு பகுதிகளிலும் கடிதங்கள் ஏற்கப்படுகின்றன. சில இதழ்களில் இணைந்து வரும் விளையாட்டு மலர், கல்வி மலர், தமிழ்மணி போன்ற மலர்கள் சிறப்பு பகுதிகள் எனலாம்.

இவை தக்கபுள்ளி விவரங்களுடன், அந்தந்தத் துறையில் பயிற்சி உள்ளவர்கள், பட்டறிவு மிக்கவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்றோரால் எழுதப்படுகிறது.

## கடிதங்களுக்குப் பரிசு:

ஆசிரியர் கடிதங்கள் பொதுவாக சமுதாய முன்னேற்ற நோக்கமுடன் எழுதப்படுபவை. கடிதங்களை ஏற்று அச்சு ஏற்றுவதே, கடிதம் எழுதுபவர்க்கு இதழ்கள் தரும் சிறப்பு. சில இதழ்கள் இக் கடிதங்களுக்குப் பரிசு அளித்து வரவேற்பு அளிக்கின்றன.

## நாளிதழ்களில் கடிதங்கள்:

நாளிதழ்களில் இடம்பெறும் கடிதங்கள் அனைத்தும் வாசகர்களின் சுவையுணர்வுக்கும் சமுதாய சிந்தனைக்கும் தீனிப் போடுகின்றன. இந்தக் கடிதங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. இதழ் வெளியிட்ட தலையங்கம் பற்றி வாசகர் கருத்து.
2. சிறப்புப் பகுதி பற்றி வாசகர் கருத்து.
3. நாட்டு நடப்பு, செய்தி ஒன்று பற்றிய கருத்து.
4. பொது பிரச்சனை, சமுதாயப் போக்கு, நிறை, குறை இவை பற்றிய வாசகர் கருத்து.
5. ஏற்கனவே கடிதம் மீது பாராட்டுரை அல்லது எதிர்ப்பு உரை அல்லது விளக்கம் தரல் .
6.

மிகச் சுருக்கமான கடிதங்களும் இதழில் இடம்பெறுகின்றன. தனிக் கட்டுரை என்று சொல்லும்படியான நீண்ட கடிதங்களும் இடம்பெறுவது உண்டு.

## *மறுப்புரை:*

கடிதங்கள் அனைத்துமே வாசகர்களின் ஏற்பைப் பெறும் என்பதற்கு இல்லை. கடிதத்தில் இடம்பெற்ற செய்திகள் சில எதிர்ப்புணர்வை உண்டாக்கலாம். சில செய்திகள் பிழையாக அமையலாம். பொருந்தாத முடிவு சிலவற்றைக் கொண்டதாக இருக்கலாம். இந்நிலையில் சான்றோர்கள் மறுப்பு தெரிவிப்பது இயல்பு. இத்தகு கடிதங்களும் இதழ்களில் வெளியிடப்படும்.

## *எதிர்ப்பும் மறுப்பும்:*

நிகழ்வு ஒன்று பற்றி ஒரு சாரர் எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுதுவதும் உண்டு. அந்த எதிர்ப்பில் உள்ள வலுவின்மையை எடுத்துக்காட்டி மறுப்பு கூறுவதும் உண்டு.

## *பொதுக் குறைபாடுகள் பற்றிய கடிதங்கள்:*

எளிய மக்களைப் பாதிக்கின்ற பொது குறைபாடுகள் ஏராளமாக உள்ளன. அன்றாட வாழ்வை உறுத்துகின்ற சிக்கல்கள் இவை. நாடு முழுவதிலும் பரவியுள்ள நிர்வாக நோய்கள் இவை. ஆட்சியில் உள்ள அலுவலர்களின் கவனக்குறைவால் ஏற்படுபவை இவை. எடுத்துக்காட்டாகச் சில:

1. குடிநீர் நாள்தோறும் கிடைக்காமை
2. கழிவுநீர் அடைப்பு
3. பேருந்து வசதி இன்மை, போதாமை
4. சாலை வசதியின்மை
5. மின்விளக்குகள் இன்மை
6. கொசுத்தொல்லை
7. பள்ளிகளில் வசதியின்மை
8. ரயில் வசதி, பேருந்து நிலையம் தேவை
9. ஆற்றில் பாலங்கள் தேவை

10. சுற்றுச்சூழல் பாதிப்பு
11. நீண்டநேர மின்வெட்டு

கீழ்மட்ட அலுவலர் ஒருவரின் கவனக்குறைவால் ஏற்படும் சிக்கல் ஒன்று, மேல் அலுவலர் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் போது தீர்க்க வாய்ப்பு ஏற்படுகிறது.

இத்தகு கடிதங்களை பாதிக்கப்பட்ட தனி நபரோ, பொதுநல அமைப்போ, அரிமா சங்கம் ,வணிகர் சங்கம் முதலியனவோ எழுதலாம். இக்கடிதங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும், மரியாதையுடனும் எழுதப்பட வேண்டும்.

## *நன்றிக் கடிதங்கள்:*

குறிப்பிடத்தகுந்த கடிதங்கள் இவை. இதழ்களில் ஆயிரமாயிரம் குறைகளையே படித்துப் படித்து சோர்ந்தவருக்கு புத்துணர்ச்சி தருவன. குறைபாடுகளைத் தெரிவிக்கும் வாசகரின் கடிதங்கள் மீது உடன் நடவடிக்கை எடுத்தும் குறைபாட்டைத் தீர்த்தும் பதிலை கடிதம் மூலம் தெரிவிப்பர். அவ்வாறு குறை தீர்த்தவர்களைப் பாராட்டி நன்றிக் கூறும் பண்பாட்டையும் வாசகர்கள் மேற்கொள்கின்றனர். இவை மக்களாட்சியின் மாண்பை புலப்படுத்துகின்றன.

மக்களாட்சி முறையில் தாங்கும் நான்காவது தூணாகிய இதழியலில் “ஆசிரியர் கடிதங்கள்” மிக முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை இவ்வியலின் வாயிலாக விரிவாகக் கண்டோம்.